2008 ஏப்ரல் 17]

115—

மாணவர் விடுதி

***31713—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கறிக்கலாம்பாடி கிராமத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கறிக்கலாம்பாடி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டுவதற்கு கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறிக்கலாம்பாடி கிராமத்திலே 642 மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியிலேயும், வேட்நத்தத்திலே உள்ள பள்ளியில் 430 மாணவர்களும் படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படித்து அந்தக் கல்வியைக் கற்பதற்கு வசதியாக அங்கே ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தேவை என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவசியம் இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

இந்த ஆண்டு 25 புதிய மாணவர் விடுதிகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய தொகுதிக்கு ஒவ்வொன்று வேண்டுமென்று கேட்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, எதிர்காலத்திலே நிதிநிலைமைக்கேற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் புறம்போக்கு இடவசதியுள்ள இடங்களிலே ஹாஸ்டல்கள் தொடங்கப்படுமானால் விரைவிலே அனுமதியோடு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பல இடங்களில் அப்படிப்பட்ட இடங்கள் இல்லாமல் வாடகையில் தொடங்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்பட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அரிக்கலாம்பாடி கிராமத்திலே அரசின் புறம்போக்கு நிலங்கள் அதிகம் அந்த இடவசதி இருக்கிற காரணத்தினால் இந்த ஹாஸ்டலைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, பல இடங்களிலே கட்டுவதற்கு இடம் இல்லாமல் சிரமப்படுகிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியில் 10 அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகூட இல்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்களவாயிலாக அறிய விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைபோல ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அந்தந்தப் பகுதிகளினுடைய தேவைகளை என் மத்தியிலே குறிப்பாக அளித்திருக்கிறார்கள். நிதிநிலைமைக்கேற்ப அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு விரைந்து எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 116. மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

116—

ஜவுளிப் பூங்கா

***24248—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனத்தில் பட்டு, கைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.கே.கே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனத்தில் பட்டு, கைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மையும் நுணுக்கமும், தரமும் வாய்ந்த திருபுவனம் பட்டு இந்தியாவின் சிறப்புப்பெற்ற ஒன்றாகும். கழக ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி பரிசு பெற்ற நெசவாளர்கள் எல்லாம் அதிகமாக அந்தப்